முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

OS 30/2022

2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 15ஆம் நாள் பி.வா.சா.1–ன் வாக்குமூலம்

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி முதன்மை மாவட்ட நீதிபதி திருமதி. .ஜி.சுபத்திரா தேவி, எம்.எல்., அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராமலிங்கம் | வயது | : | 60 |
| தந்தை/கணவர் பெயர் | : | முத்தைய பிள்ளை | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | கடலூர் | | : | |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் தோப்பில் வீடு கட்டி குடியிருப்பதாலும், அங்கு போஸ்ட் மேன் வரமாட்டார் என்பதாலும், நிரந்தர முகவரியாக என் அக்காவின் முகவரியை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என் வீட்டின் முகவரி கதவு எண் 25 புவனகிரி மெயின் ரோடு, குறிஞ்சிப்பாடி என்றால் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படுவது என் வீட்டின் சொத்து வரி ரசீது என்றால் இல்லை. ரெட்டியார் காலனியில் என்னை தவிர 4 ராமலிங்கம் உள்ளோம். மு.ராமலிங்கம் என்று தான் வரி ரசீதில் உள்ளது என்றால் அது நான் இல்லை. சாட்சியிடம் காட்டப்பட்ட ஆவணம் வா.சா.ஆ. 27 ஆகும். தற்போது என்னிடம் காட்டப்படுவது மின்சார வாரியத்தில் கொடுக்கப்பட்ட ரசீது என்றால் நான் அங்கு மாடு கட்டி பால் கறந்து வியாபாரம் செய்கிறேன். என் பெயரில் உள்ள ஆவணம் தான் அது. அந்த ஆவணம் வா.சா.ஆ. 28 ஆகும்.

தற்போது என்னிடம் காட்டப்படுவது 1999 தேதியிட்ட என் அம்மா எழுதிய உயில் ஆவணம் என்றால் சரிதான். உயில் ஆவணம் வா.சா.ஆ. 29 ஆகும். என் அம்மா இறக்கும் போது 90 வயது இருக்கும். என் அம்மா இறக்கும் போது கேன்சர் இருந்தது என்றால் சரிதான். அதற்கு முன்பு பக்கவாதம் இருந்தது. கேன்சர், பக்கவாதம் இருந்தும் நடமாடிக்கொண்டிருந்தார் .என் அம்மாவுக்கு உடல் நிலையும், மனநிலையும் சரியில்லாமல் இருந்த போது நான் என் அம்மாவினை மிரட்டி இந்த உயில் ஆவணத்தினை எழுதவைத்தேன் என்றால்சரியல்ல. செட்டில்மென்ட் ரத்து செய்தது நீதிமன்றத்தின் மூலம் செய்தால் தான் செல்லும் இல்லையென்றால் செல்லாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து வாதிக்கு சொந்தமான சொத்து என்றாலும் அதில் என் அண்ணன் நடராஜன் மட்டும் தான் குடியிருந்தார் என்றறாலும், என்அம்மா அவர்களுடன் தான் இருந்து வந்தார் என்றாலும் சரியல்ல, நானும் என் அம்மாவும் தான் இருந்தோம். என் இன்னொரு அண்ணன் மகன் என் மீது இந்நீதிமன்றத்தில் வழக்கு போட்டுள்ளார் என்றால் சரிதான். நான் உள்ளூரில் உள்ளதால் ஏமாற்றிக்கொண்டு இருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கு சொத்து வீட்டில் குடியிருக்கிறேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் என் அக்கா வீட்டின் முகவரியை தான் நிரந்தர முகவரியாக பயன்படுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல.